**கடுவெல மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 02 ஆந் திகதியன்று மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர கடுவெல மாநகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) காசோலை மூலம் H68452324024 ஆம் இலக்கச் செயற்திட்டத்திற்கெனப் பெறப்பட்ட ரூபா 486,294 கருத்திற் கொள்ளப்படாது ரூபா 500,000 கடன்பட்டோராகக் காட்டப்பட்டிருந்ததன் மூலம் ஆண்டிற்கான வருவாய் உதவிக் கணக்கும் கடன்பட்டோர் கணக்கும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 44,838 பெறுமதியான 10 காசோலைகள் வருவாயிலிடப்படாததால் மீளாய்வாண்டினது வருவாய் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 133,444 பெறுமதியான 2 கையிருப்புப் பொருட்கள் கணக்கிலிடப்படாததால் கையிருப்பினது பெறுமதி அதேயளவு குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கான முத்திரை வருவாய்க்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதிக்கு அதிகமாக முன்னைய ஆண்டினது மிகையும் கடன்பட்டோர் மீதியும் பெறப்பட்ட வருவாயாகிய ரூபா 168,646,261 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(உ) பதிவழிக்கப்பட வேண்டிய ஊழியர் சம்பளமான ரூபா 15,262,972 கணக்கிலிருந்து நீக்கப்பட்டமையால் கடன்பட்டோர் கணக்கும் திரண்ட நிதியமும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) ஜயவடனகம சனசமூக நிலையத்தை வாடகைக்கு வழங்கியமையால் பெறவேண்டியாதாகவிருந்த நிலுவையை வாடகையாளர் பெற்ற மின்சார இணைப்புக்கு ஈடுசெய்யும்போது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்படாது உதவு தொகைக்

கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் ஆண்டினது மிகை ரூபா 170,000 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 81,227 கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்படாமையால் கடன் கொடுத்தோர் மீதி அதேயளவு அதிகரித்தும் திரண்ட நிதியம் அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) 2013/2014 ஆம் ஆண்டுகளின்போது நிர்மாண வேலைகளுக்கான கடன் கொடுத்தோருக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கையில், முன்மொழியப்பட்ட 15 நிர்மாண வேலைகள் இரத்துச் செய்யப்பட்டதையடுத்து அதற்கான கணக்கீட்டுக் குறிப்புகளை மேற்கொள்ளாமையால் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 8,349,374 அதிகரித்தும் திரண்ட நிதியம் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) உள்ளவாறு ரூபா 2,598,159 கிரயமுடைய 04 வேலைகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட கடன் கொடுத்தோர் நிதியேற்பாடு ரூபா 1,760,779 ஆகும். இதனைக் கடன் கொடுத்தோர் கணக்கிலிருந்து நீக்காததால் கடன் கொடுத்தோர் மீதியும் திரண்ட நிதியமும் ரூபா 1,760,779 அதிமாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) கூடுதலாக அறவிடப்பட்டிருந்த ஊழியர் கடனாகிய ரூபா 32,952 கடனுக்குரிய கடனின் மூல மீதிக்கு எதிரே பதிவழிக்கப்பட்டிருந்தது. இதனால் பெற வேண்டிய கடன் மீதி ரூபா 32,952 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஓ) ஆயுர்வேதக் கையிருப்பில் உள்ளடங்கிய காலாவதியாகிய கையிருப்பின் பெறுமதியைக் கணிப்பிட்டு அதனைக் கையிருப்பிலிருந்து நீக்குதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மாநகர சபைக்குச் சொந்தமான 03 நூலகங்களில் தொலைந்து போன 522 புத்தகங்களினது பெறுமதியாகிய ரூபா 110,035 மற்றும் வெள்ளத்தால் அழிவுக்குள்ளான 18 புத்தகங்களது பெறுமதியாகிய ரூபா 5,355 என்பவற்றைக் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

இறுதிக் கணக்குகளின் பிரகாரம் 08 கணக்கீட்டு விடயங்களது மீதி ரூபா 819,172,486 ஆகவிருக்க அதனோடு தொடர்புடைய உப பதிவேடுகளில் அம்மீதி ரூபா 793,343,701 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 25,920,185 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கூட்டுத் தொகை ரூபா 478,860,653 ஆகவுள்ள 02 கணக்கீட்டு விடயங்களுக்குரிய கணக்காய்வுச் சான்றின்மையால் அவற்றைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 513,259,716 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 330,502,111 ஆகும்.

### 2.2 வங்கிக் கணக்கிணக்கம்

(அ) நெடுங்காலமாகச் செயற்படாதிருந்த நடைமுறைக் கணக்கு இலக்கம் PB163869561 (மக்கள் வங்கி) கணக்கில் உள்ள சமர்ப்பிக்கப்படாத காசோலைகள், தேறாத பெறுவனவுகள், இனங்காணப்படாத கொடுப்பனவுகள் எனக் குறிப்பிடப்பட்ட மீதி ரூபா 1,374,084 ஆகும். இவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 1700010082 (மக்கள் வங்கி) இலக்கக் கணக்கில் இருந்த இனங்காணப்படாத பெறுவனவு ரூபா 125,461 ஆகும். இதனை இனங்கண்டு தீர்த்து வைத்திருக்கவில்லை.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மாநகர சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | பட்டியல் இடப்பட்டது | உள்ளவாறு அறவிடப்பட்டது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | பட்டியல் இடப்பட்டது | உள்ளவாறு அறவிடப்பட்டது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 59,206,698 | 126,882,732 | 132,744,987 | 53,344,443 | 180,019,909 | 113,144,239 | 19,358,562 | 63,929,295 |
| குத்தகை வாடகை | 399,586 | 9,120,182 | 9,348,190 | 171,578 | 13,600,834 | 11,319,667 | 1,348,749 | - |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | - | 13,071,172 | 13,071,172 | - | 11,161,970 | 11,161,970 | - | - |

#### 2.3.2 தீர்வையும் வரியும்

(அ) நெடுங்காலமாகக் கொடுப்பனவைப் புறக்கணித்தவாறிருந்த சொத்துக்களின் மூலம் அறவிடப்பட வேண்டிய தீர்வை வரி நிலுவை ரூபா 766,806 ஆகும். இந்நிலுவையை அறவிடுவது தொடர்பாக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 254 (அ) (2) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 201 டிசெம்பர் 05 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1735/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி (மேல் மாகாண சபை) யின் பிரகாரம், கடுவெல மாநகரசபையின் அதிகாரத்துக்குட்பட்ட சகல சினிமாக் கொட்டகைகளிலிருந்தும் 2013 சனவரி 01 முதல் அனுமதிச்சீட்டின் 15 சதவீதத்தை வினோத வரியாக அறவிட வேண்டுமாயினும், சபையின் அதிகார வரம்புக்குட்பட்ட 04 சினிமாக் கொட்டகைகளிலிருந்து 2016 ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 5,920,171 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வினோத வரி**

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வினோத வரிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சபையின் அதிகார வரம்புக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 04 சினிமாக் கொட்டகைகளுக்கும் மீளாய்வாண்டிற்கென பட்டியலிடப்பட்ட வினோத வரி ரூபா 4,344,767 ஆகும். அதில் ரூபா 1,951,397 ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 5,122,723 ஆகவிருந்த நிலுவை ஆண்டின் இறுதியில் ரூபா 7,516,093 ஆக அதிகரித்திருந்தது. வினோத வரிக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் வரியைப் புறக்கணிக்குமிடத்து நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவோ அதனை அறவிடவோ மாநகரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.4 கடை வாடகை**

கடுவெல மாநகர சபைக்குரிய பொதுச் சந்தையின் கடைகளுக்கான வாடகை 2001 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படுவதுடன், சகல வர்த்தக நிலையங்களதும் வருடாந்த வாடகை ரூபா 237,900 ஆகவுமிருந்தது. 2017 மே 26 ஆந் திகதிய புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வருடாந்த வாடகை ரூபா 2,709,600 ஆகியது. அதன் பிரகாரம், குறித்த காலத்தில் மதிப்பீட்டை மேற்கொள்ளாமையால் வருடாந்தம் ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை 10 ஆண்டுகளாகச் சபைக்கு கிடைக்காது போனது. 1984 ஆம் ஆண்டின் பின்னர் இக்கடைகளுக்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு வரி அறவிடுதல்**

2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு வரி அறவிடுவதென 2014 நவம்பர் 17 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தல் விடுவிக்கப்பட்டபோதும், மேற்படி வரி கடுவெல அலுவலகங்களில் 2016 ஆம் ஆண்டின்போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

**(அ) தீர்வை வரியும் நூலக மென் அணியும்**

இம் மென் அணி முறைமையைக் கொள்வனவு செய்வதற்கு 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 824,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், நூலக மென் அணி விஞ்ஞான ரீதியாக உருவாகாமையால் தற்போது பயன்படுத்தப்படாதிருந்ததுடன், தீர்வை வரியைக் கணக்கிடலும் மென் அணி இணையதளத்தில் அமையவில்லை.

**(ஆ) வாரச்சந்தையை மீள அமைத்தல்**

கடுவெல சந்தையை மீள அமைப்பதற்கென 0.98211 ஹெக்டயர் காணியை சுவீகரிப்பதற்கு (றுக்அத்தன ஓவிட வயல் எனும் காணி) ரூபா 80 மில்லியன் நகர

அபிவிருத்தி அதிகார சபைக்கு 2014 ஆம் ஆண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், 2017 யூன் 30 வரை காணியின் உரித்தைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது சம்பந்தமாக மாநகரசபை கட்டளைகள் சட்டத்தின் 228 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புடைய நடவடிக்கைக்குரிய உடன்படிக்கைகளில் இருசாராரும் ஈடுபட்டிருக்கவில்லை.

**(இ) தீயணைப்புச் சேவையை நடாத்துதல்**

உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய LGD/05/11/Vol V இலக்கச் சுற்றறிக்கையின்படி தீயணைப்பு மற்றும் காப்பாற்றும் சேவையைப் பெறுவதற்கு மாநகரசபை வட்டாரத் தீயணைப்புக் கூறான ஸ்ரீ ஜயவர்த்தனபுர தீயணைப்புக் கூறுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கவில்லை.

**(ஈ) பத்தரமுல்ல பொதுச் சந்தையைப் பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்தமை**

மாநகர சபைக்குரிய பத்தரமுல்ல பொதுச் சந்தையில் உள்ள 70 கடைகளை 2011 மார்ச் 27 ஆந் திகதி நகர அபிவிருத்தி சபையினூடாகப் பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டின்போது பாதுகாப்பு அமைச்சு இப்பொதுச் சந்தையை விட்டு நீங்கியிருந்த போதும், இக்கடைகளை மீண்டும் மாநகர சபையிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. இக்கடைகளை இழந்தமையால் மாநகரசபைக்கு அண்ணளவாக ரூபா 3,360,000 நிதியிழப்பு ஏற்பட்டிருந்தது.

**(உ) ஊழியர் கடன்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 44,393,408 ஆகும். அதில் வேலை இடமாற்றத்திற்குள்ளான 29 உத்தியோகத்தர்களது ரூபா 1,649,221, ஓய்வுபெற்ற 21 ஊழியர்களது ரூபா 96,177, சேவை நீங்கிய 45 பேரது ரூபா 425,531, சேவை இடைநிறுத்தப்பட்ட 13 பேரது ரூபா 133,348, மரணமடைந்த 38 பேரது ரூபா 266,677 என்பவையும் அறவிடப்பட வேண்டியிருந்தன. நிலுவையாக உள்ள இம்மீதிகளை அறவிடுவதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுத்திராததுடன், மீதிகளது காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ள ரூபா 1,325,000 பெறுமதியான 3 டிறெய்லர்கள் மற்றும் பெறுமதியை அறிய முடியாதுள்ள 04 டிறெய்லர்கள் என்பன அத்துறுகிரிய வேலைத் தளத்தில் துருப்பிடித்தவாறிருந்தன. பெறுமதியை அறியாதவாறுள்ள மின்பிறப்பாக்கி ஒன்றும் 03 டிறெய்லர்களும் சபை வளாகத்தில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன.

(ஆ) இலக்கத்தை அறிந்து கொள்ள முடியாததும் அழிவு நிலையில் உள்ளதுமான 09 டிறெய்லர்கள் அத்துறுகிரிய மாநகரசபை வளாகத்தில் துருப்பிடித்தவாறிருந்தன. அவற்றை கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) 2014, 2015 ஆம் ஆண்டுகளின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 225,150 பெறுமதியுடைய 57 வீதிப் பெயர்ப் பலகைகள் மாநகர சபை வளாகத்தில் உள்ள கையிருப்புக் களஞ்சியத்தினருகே பாதுகாப்பற்று இருந்தன.

(ஈ) 2015 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 126,836 பெறுமதியான 06 பொருட்கள் களஞ்சியத்தில் பயனற்றிருந்தன.

(உ) மேல் மாகாண திண்மகழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையால் மாநகர சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஜீவவாயுக் கூறு (பெறுமதி வெளியிடப்படாதது) அநேக ஆண்டுகளாக பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தது. அதனைத் திருத்தியமைத்து கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்குப் பயன்படுத்துவதற்கு மாநகர சபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) கடுவெல கழிவு முகாமைத்துவப் பிரிவிலிருந்து கழிவுகளைக் கொண்டு செல்வதற்கு 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 57,071,536 ஆகும். எனினும், ஒப்பந்தகாரர்கள் அவற்றை எங்கே அகற்றி இருந்தனர் என்பது உறுதியாகவில்லை.

(ஆ) 2015 மே 28 ஆந் திகதிய பிரசித்த கூறு விலைக் கோரலின் பிரகாரம் 8 நிறுவனங்கள் சமர்ப்பித்திருந்த கூறு விலைகளில், 3 நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்தகாரர்களுடன் எழுத்து மூல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படவில்லை.

(ii) மாநகர சபைக் கட்டளைகள் சட்டம் 229(1) (அ) பிரிவுக்கமைய பிணை வைப்புப் பெறப்படவில்லை.

### 3.4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டின் செயலாற்றல் போட்டி வெற்றியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா ஒன்று 2015 டிசெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்றது. அதற்கான மொத்த செலவினம் ரூபா 550,000 ஆகும். இச்செலவில் 90 சதவீதமான ரூபா 488,000 கட் அவுட் மற்றும் மேடை அலங்காரங்களுக்கு ஏற்பட்ட செலவினமாகும்.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டின்போது மாநகரசபை அமுலாக்குவதற்குத் திட்டமிட்ட 499 செயற்திட்டங்களுள் 12 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 வேலைகள் முடிவடையாதுமிருந்தன.

### 3.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

தலைமை அலுவலகத்தின் திறந்த வெளியரங்கில் உள்ள களஞ்சியத்தில் இருந்த ரூபா 139,381 பெறுமதியான 141 கொடிக் கம்பங்கள் மற்றும் ஜயவடனகம நூலகத்தின் 13 நாற்காலிகள் என்பன தொலைந்திருந்தன.

## 4. நல்லாளுகையும் கணக்களி தகைமையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய்க்கும் செலவினத்திற்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாய் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

---

2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அத்திட்டத்தின் செயற்பாட்டு முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது ஆணையாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) வருவாய் நிர்வாகம்